நகராட்சிக்கு கொடுக்கப்பட்டன. செப்டம்பர் திங்கள் இரண்டாம் வாரத்தில் இந்தத் தீவிர இயக்கம் ஈரோடு, கோவை, திருச்சி மற்றும் அவைகளின் சுற்றுப் புறங்களிலும் நிறைவேற்றப்பட்டது.

(j) தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், மலேரியாத் தடுப்பு மருந்து பற்றுக்குறை ஏதும் ஏற்படவில்லை.

இணைப்பு III.

(27-28 ஆம் பக்கங்களில் 77, 78, 79 ஆம் எண்களுள்ள உடுக்குறியிட்ட வினாக்களின் விடையைக் காண்க.)

பருவமழை தவறியதனால், பொதுவாகத் தமிழ்நாட்டிலும், குறிப்பாகச் சென்னை மாநகரிலும் இதன் முன்னர் என்றும் கண்டிராத கடுமையான அளவிற்கு வறட்சி நிலை ஏற்பட்டது. எனவே, இந்நீர்ப் பற்றுக்குறையைப் போக்க புது வழி ஒன்றைக் காணவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. சென்னை மாநகரின் குடிநீர்த் தேக்கமான செங்குன்றம் ஏரியின் நீர்கோள் பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தில் புனல் மின் நிலையம் அமைந்துள்ள பகுதிகளிலும் செயற்கை மழை பெய்விப்பதற்கான திட்டம் ஒன்றை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க, இந்திய அரசின் இசைவு பெற்று, செங்குன்றம் ஏரியின் நீர்கோள் பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தின் புனல் மின் நிலையம் அமைந்திருக்குமிடங்களிலும் மேகங்களில் சில்வர் அயோடைடைத் தூவுவதன் மூலம் செயற்கை மழை பெய்விப்பதற்கான சோதனைகளை மேற்கொள்ள கலிபோர்னியாவைச் சேர்ந்த திருவாளர்கள் அட்மாஸ் பிரிக்ஸ் இன்கார்போரேட்டுடன் ( ) ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்நிறுவனமே இவ் ஆய்வுக்குத் தேவையான மேகத்தினுள் மருந்தைத் தூவும் பொறிகள் கொண்ட விமானம், ராடார், மேகத்தில் சில்வர் அயோடைடைத் தூவுவதற்கான கருவிகளோடு தொழில் நுட்பப் பணியாளர்களையும் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே ஏற்பாடு செய்து செயற்கை மழையைப் பெய்விக்க ஆவன செய்யவேண்டும். மாநில அரசு இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் ஏற்றுள்ளது.

2. இந்த ஒப்பந்தத்திற்கிணங்க, செயற்கை மழை பெய்விப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்யவேண்டிய கால அளவு 15-7-1975 ஆம் நாளிலிருந்து 31-10-1975 ஆம் நாள் வரையிலாகும். இதற்கான நடவடிக்கைகள் 12-7-1975 ஆம் நாளன்றுதான் தொடங்கின. செயற்கை மழை பெய்விப்பதற்கான

நடவடிக்கைகள் முழுவதையும் உள்ளடக்கி இறுதி மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை இந்நிறுவனம் அளிக்கும். இந்த ஆய்வுகளின் பயனை மதிப்பீடு செய்வதன்பொருட்டு அமைக்கப்பட்ட குழு 1975 ஆம் ஆண்டு நவம்பர் திங்களின் முதல் வாரத்தில் மதிப்பிடும்.

3. இம்மாநிலத்தில் வருங்காலத்தில் வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் செயற்கை மழை பெய்விக்கச் செய்யலாமா என்பது குறித்து நாளடைவில் ஆராயப்படும்.

4. மேற்சொன்ன ஒப்பந்தத்திற்கிணங்க, ஒப்பந்தக் காலத்தில் மேற்சொன்ன நிறுவனம் புரிந்த பணிக்காக அந்நிறுவனத்திற்கு இந்த அரசு மொத்தம் 1,57,400 அமெரிக்க டாலர் தொகையை வழங்க வேண்டியுள்ளது. இத் தொகையில் சுங்கக் கட்டணங்களோ, இறக்குமதித் தீர்வைகளோ அல்லது எந்தவகையிலான வரிகளோ அடங்கா.

5. செயற்கை மழை பெய்விக்கும் ஆய்வுகளை நடத்த இந்த அரசு மொத்தச் செலவு ரூ. 19,92,000-க்கு (19 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய்) ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இதுவரையில் ரூ. 19,25,617.01 செலவு ஏற்பட்டுள்ளது. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	ரூ.	பை.
(1) 1975-ஆம் ஆண்டு ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் ஆகிய திங்களில் அமெரிக்க நிறுவனத்திற்குக் கொடுக்கபெற்ற தொகை	13,01,020	00
(2) விமானம், ராடார் சாதனங்கள் செயற்கை மழை பெய்விப்பதற்கான கருவிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்ததற்காகச் செலுத்தப்பட்ட சுங்கக் கட்டணம்	6,23,742	01
(3) செலுத்தப்பட்ட ஆயுள் ஈட்டுறுதித் தவணைத் தொகை	855	00
மொத்தம்	19,25,617	01

மேற்சொன்ன ஒப்பந்தத்திற்கிணங்க, இந்நிறுவனத்திற்கு இன்னும் ரூ. 66,300 (7,800 அமெரிக்க டாலர்) கொடுக்கப்படவேண்டியுள்ளது.

1975 நவம்பர் 6]

6. இச்சோதனையின் தன்மையையும், இத்திட்டத்தின் பொது முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விமானம், ராடார் சாதனங்கள், செயற்கைமழை பெய்விப்பதற்கான கருவிகள் ஆகியவை குறித்த சுங்கத் தீர்வையைத் தள்ளுபடி செய்யுமாறும், இந்த அரசால் சுங்கத் தீர்வையாகச் செலுத்தப்பட்ட 6,23,742.01 ரூபாயைத் திருப்பிக் கொடுக்குமாறும் இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய அரசுடன் இன்னும் கடிதத் தொடர்பு நடைபெற்று வருகிறது.

இணைப்பு IV

(31 ஆம் பக்கத்தில் 80 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

(அ) & (இ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் "எட்வர்டு" வகை ரோசா மலர்களிலிருந்து ரோசாப் பிழம்பு (கான்கிரீட்டு) எடுப்பதற்கான முறை ஒன்றை உருவாக்கியுள்ளது. அன்றலர்ந்த ரோசா மலர்கள், காற்றுப் புகாத கொள்கலன்களில் 4 அல்லது 5 மணி நேரம் "ஹெக்கேசன்" அல்லது பெட்ரோலியம் ஈதரில் 65—70 சென்டிகிரேட் தட்ப வெப்ப நிலையில் அமிழ்த்தி வைக்கப்படுகின்றன. ரோசா மலரின் சாறு, ஹெக்சேனில் அல்லது பெட்ரோலியம் ஈதரில் கரைந்துவிடும். பிறகு இந்தக் கரைசல் காய்ச்சி வடித்தல் மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது. கரைசலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சாறுனது "கான்கிரீட்" (ரோசாப் பிழம்பு) என்று அழைக்கப்படும்.

2. மலர்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மெழுகு (முதலியன) வண்ண மூட்டும் பொருள்கள் போன்ற பல பொருள்களை இது கொண்டிருக்கும் எட்வர்டு ரோஜா மலரின் ரோசாப் பிழம்பு (கான்கிரீட்) சிவப்பு வண்ணத்தில் இருக்கும். இது 46—50 சென்டிகிரேட் வெப்பத்தில் உருகக்கூடியது. ஒரு கிலோ கிராம் மலரிலிருந்து 2.3 முதல் 3 கிராம் வரை ரோசாப் பிழம்பு (கான்கிரீட்) தயாரிக்கலாம். இது முகப் பவுடர்கள் ஒப்பனைக் களிம்புகள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் செறிந்த கரைசல் சாராவியில் இதனைக் கரைத்துத் தூய்மைப்படுத்தினால் 40 விழுக்காடு நிறையில் தூய நறுமணப் பொருளைத்தரும். இது நறுமணப் பொருள் தயாரிப்பவர்களால் பயன்படுத்தப் படுகிறது.

(1) (தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில்) தமிழ்நாட்டில் வணிக முறையில் பயிரிடப்படும் எட்வர்டு வகை ரோசாவிலிருந்து எவ்வளவு ரோசாப் பிழம்பு எடுக்க இயலும் என்பதனையும்.